# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலை கலாசார பீடம்

முதலாம் வருட முதலாம் அரையாண்டுத்தேர்வு 2015/2016

ஜூலை 2017

LIBRARY
21 FEB 2018
EASTERN UNIVERSITY, SRI LANKA

L 1112 விமர்சன நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு

நேரம் : இரண்டு மணித்தியாலங்கள்

பகுதி ஒன்றிலிருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி இரண்டிலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

### பகுதி – I

1. அ. 'இலக்கிய வரலாறு' என்ற தொடரால் நீர் விளங்கிக்கொள்வது யாது? (03 புள்ளிகள்)

   ஆ. தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலப் பகுப்பு மேற்கொண்டோர் நால்வரின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களின் காலப்பகுப்பையும் தருக. (12 புள்ளிகள்)

   இ. தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பாக வி. செல்வநாயகத்தின் காலப் பகுப்புக் கொண்டுள்ள பிரச்சினைகளை எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

2. அ. சங்க கால இலக்கியங்களைப் பொருள்மரபின் அடிப்படையில் வகைப்படுத்துக. (05 புள்ளிகள்)

   ஆ. அவற்றைத் தொகுக்கும் போது பின்பற்றப்பட்டுள்ள அடிப்படையான விடயங்களை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

   இ. சங்க கால புறத்திணை இலக்கியப் பண்புகளை உதாரணங்களுடன் விளக்குக. (10புள்ளிகள்)

3. அ. தமிழில் நவீன இலக்கியங்களின் தோற்றத்துக்கான காரணங்களைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ. நவீன கவிதையின் பண்புகளைக் குறிப்பிட்டு பாரதியாரின் கவிதைகளில் அப்பண்புகள் வெளிப்படுமாற்றை உதாரணங்களுடன் விளக்குக. (15 புள்ளிகள்)

### பகுதி – II

4. தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியங்கள் ஏற்படுத்திய மாற்றங்களை எடுத்துக்கூறி விஜய நகர நாயக்கர் காலம் இரண்டாவது பக்தி யுகம் என்று கூறப்படுவதற்கான காரணங்களையும் விளக்குக. (25 புள்ளிகள்)

5. சோழர் காலத்தில் காவியங்கள் அதிகமாகத் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களையும் பிற்காலத்தில் ஒடுங்குதசையடைந்தமைக்கான காரணங்களையும் குறிப்பிட்டு விளக்குக. (25 புள்ளிகள்)

6. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்களைத் தெளிவுபடுத்தி அம்மாற்றங்களுக்கான காரணங்களை மதிப்பிடுக. (25 புள்ளிகள்)